# கல்விப்பீடம்,
# கொழும்புப் பல்கலைக்கழகம்.

## முதுகல்விமாணிக் கற்கைநெறி (பொது) (முழுநேரம்) தமிழ் மொழிமூலம்
## Master of Education in General (Full Time) Course in Tamil Medium
## 2020/2021

**அறிமுகம்**

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடத்தினால் நடத்தப்படும் மேற்படி கற்கைநெறியானது கல்வித் துறையிலுள்ள ஆசிரியர்கள்/கலைத்திட்ட வடிவமைப்பாளர்கள்/ நிர்வாகிகள்/ முகாமையாளர்கள் போன்றோரின் நிபுணத்துவ விருத்தியை நோக்கமாகக் கொண்டு வழங்கப்படும் கற்கைநெறிகளாகும். இக் கற்கைநெறிகளைத் தொடர்வதற்காக அரச மற்றும் தனியார் துறைகளிலுள்ள சேவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவை முழுநேரக் கற்கைநெறிகள் என்பதால் கற்கை விடுமுறையைப் பெற்றுக்கொள்ள முடியுமான விண்ணப்பதாரிகள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்

**கற்கைநெறியின் நோக்கங்கள்**

1. கல்வியின் பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் அடையச் செய்தல்
2. கல்வித்துறையிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் ஆய்வுகளில் ஈடுபடுவதற்குத் தேவையான அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு ஆகியவற்றை விருத்தி செய்தல்
3. கோட்பாடு சார்ந்த அறிவு மற்றும் பிரயோகம் தொடர்பான செல்நெறிகளை உருவாக்குதல்
4. கல்வித்துறையில் உயர் சேவைக்குத் தேவையான அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கை விருத்தி செய்தல்.

**கற்கைநெறியின் காலம்**

இது ஒரு வருடகால முழுநேரக் கற்கைநெறியாகும். வார நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை விரிவுரைகள் நடைபெறும். 80% வரவு கட்டாயமானதாகும். முழுநேரக் கற்கை விடுமுறையைப் பெற்றுக்கொள்வது விண்ணப்பதாரிகளின் பொறுப்பாகும்.

**கற்கை நெறியின் மொழிமூலம்**

கல்வி முதுமாணி கற்கைநெறி (பொது) (முழுநேரம்) 2020/2021 தமிழ் மொழிமூலமாக நடாத்தப்படும். ஆயினும் ஆங்கிலமொழித் தேர்ச்சி மிகவும் அவசியமானதாகும்.

**கற்கைநெறியில் சேர்ந்து கொள்வதற்கான தகைமைகள்**

**முதலாம் வகை**: கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்விமாணிக்கற்கை நெறியில் முதலாம்/இரண்டாம் வகுப்புச் சித்தியுடனான பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டத்துடன்

கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அதிவிசேட அல்லது விசேட சித்தியுடனான பட்டப்பின் கல்வி டிப்புளோமாப் பட்டத்தைப் பெற்றிருத்தல்

அல்லது,

வேறு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களிலிருந்து மேலே குறிப்பிடப்பட்டதையொத்த தகைமைகளைப் பெற்றிருத்தல்

**இரண்டாவது வகை:** கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட கல்விமாணிப்பட்டம்

அல்லது,

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட பட்டத்துடன் கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட பட்டப்பின் கல்வி டிப்புளோமாப் பட்டம்

- மேலே குறிப்பிடப்பட்ட தகைமைகளுடன் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினத்தன்று விண்ணப்பதாரிகள் மூன்று வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**கற்கைநெறிக்கான கட்டணம்**

கற்கைநெறிக்கான கட்டணம் 90,000.00 ரூபாவாகும். இதற்கு மேதிகமாக நூலகத்தைப் பயன்படுத்துவதற்காக ரூபா 5,000.00 செலுத்தப்படல் வேண்டும்

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் கற்கைநெறிக்குத் தம்மைப் பதிவு செய்யும்போது கற்கைநெறிக் கட்டணத்தை ஒரே தடவையில் செலுத்துதல் வேண்டும்
கற்கை நெறிக்குரிய கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர் அதனை மீளப் பெற்றுக்கொள்ள முடியாது.

கற்கைநெறியில் சேர்த்துக்கொள்ளப்படக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றால் எழுத்துப்பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை என்பன நடத்தப்பட்டு உயர் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் கற்கைநெறிக்குத் தெரிவு செய்யப்படுவர்.

**கற்கைநெறி தொடர்பான தகவல்கள்**

இக் கற்கைநெறி தொடர்பான மேலதிக தகவல்களை http://edu.cmb.ac.lk என்ற இணையத்தளத்துக்குள் பிரவேசிப்பதனூடாகவோ அல்லது 011-2588812 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் ஊடாகவோ பெற்றுக்கொள்ள முடியும்.

**கற்கைநெறிக்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளல்**

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கல்விப்பீட இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யப்படும் விண்ணப்பப் படிவங்களைப் பூரணப்படுத்தி கீழே குறிப்பிடப்பட்ட மக்கள் வங்கியின் கணக்கிலக்கத்துக்கு 1000.00 ரூபாவினை வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டுடன் நீங்கள் பணிபுரியும் நிறுவனத் தலைவரின் அலுவலக முத்திரையுடன்கூடிய கையொப்பத்தினைப் பெற்று கீழேயுள்ள முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால்

மூலமோ அனுப்பிவைக்க வேண்டும் (பணம் செலுத்தப்பட்டதற்கான பற்றுச்சீட்டின் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்).

Master of Education in General Course – 2020/2021 (Tamil Medium)

**Account No. 206207800016**

**விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய இறுதித் திகதி**

2020 யூன் மாதம் 20ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை ரூபா 40 மற்றும் ரூபா 15 பெறுமதியுடைய முத்திரையொட்டப்பட்ட சுயமுகவரி எழுதப்பட்ட 22x10cm அளவுடைய இரண்டு கடித உறைகளுடன் இணைத்து கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கைநெறியின் பெயரைக் குறிப்பிடுக உதாரணமாக: (MEd/G/FT /TM)

Master of Education in General (Full Time) Course (MEd/G/FT/TM)

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:

**Course Coordinator,**
**Master of Education (Full time) Course,**
**Faculty of Education,**
**University of Colombo,**
**Colombo 03**.

**கற்கைநெறியை ஆரம்பித்தல்**

தெரிவுப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை என்பன நடைபெறும் திகதிகள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடத்தின் http://edu.cmb.ac.lk என்ற இணையத்தளத்தில் பதிவேற்றப்படுவதுடன் மேலதிகமாக விண்ணப்பதாரிகளுக்கு தபால் மூலமும் அறிவிக்கப்படும்.